# ශ්‍රී ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,934/5 — 1970 දෙසැම්බර් 3 වැනි බ්‍රහස්පතින්දා — 1970.12.3

14,934/5 ம் இலக்கம் — 1970 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 3 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

84 ஆம் பிரிவின் கீழான கட்டளை

(262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 84 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் ரெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், 1970 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ம் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ நடத்தப்படவிருந்த காலி மாவட்டத்து, மாதம்பை கிராமச் சபையின் பொதுத் தேர்தல் சம்பந்தமாக அதன் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15 ஆகிய வட்டாரங்களின் அபேட்சகர்களை நியமிக்கும் நோக்கத்துக்காக உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் இலக்கப் பிரிவின் கீழ் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவும் இன்மையுற்று எப்பயனுமற்றனவாதலோடு எக்காலும் அவ்வாறே இருந்திருப்பனவாகவும் கருதப்படல் வேண்டுமென இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகிறேன்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு நொவெம்பர் மீ 30 ந உ.

பீலிக்ஸ் ஆர். டி. பண்டாரநாயக்க,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர்.

12–325/1

---

### உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

(262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 13 ஆம், 84 ஆம் பிரிவுகளால் அவருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

கொழும்பு,
1970 ம் ஆண்டு நொவெம்பர் மீ 30 ந உ.

பீலிக்ஸ் ஆர். டி. பண்டாரநாயக்க,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

#### கட்டளை

1. கொழும்பு மாவட்டத் தேர்தல் அலுவலர், 1971, பெப்ருவரி 23 இல் அல்லது அதற்கு முன்னர் நடைபெறவிருக்கும் கோட்டே நகரசபை உறுப்பினர்களது தேர்தலின் நோக்கத்துக்காக, மேற்குறித்த நகரசபை உறுப்பினர்களது பதவிக்காலம் தொடங்கவிருக்கும் தேதியைக் கருத்திற் கொண்டு, தமது தற்றுணிபைப் பிரயோகித்துத் தம்மால் தீர்மானிக்கப்படுகின்றபடியான அத்தகைய தேதிகளில் குறித்த பொதுத் தேர்தலின் பொருட்டுக் குறித்த உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 26 ஆம், 38 ஆம் பிரிவுகளால் வேண்டப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

2. (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தில் எது எவ்விதமிருப்பினும், முன்னே சொல்லப்பட்ட பொதுத் தேர்தலின் நோக்கங்களுக்காகத் தேர்தல் நிரல்கள் எவையாவது தயாரிக்கப்படலாகாது, அத்துடன் 1970, யூலை 19 இல் கொழும்பு மாவட்டத் தேர்தல் அலுவலரால் சான்றளிக்கப்பட்ட தேர்தல் நிரல்களே சொல்லப்பட்ட பொதுத் தேர்தலின் நோக்கங்களுக்கான தேர்தல் நிரல்களாக உபயோகிக்கப்படுதல் வேண்டும்.

12–325/2

## உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

(262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 13 ஆம், 84 ஆம் பிரிவுகளால் அவருக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

பீலிக்ஸ் ஆர். டி. பண்டாரநாயக்க,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1970.11.30.

### கட்டளை

1. களுத்துறை மாவட்டத் தேர்தல் அலுவலர், 1971, மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் நடைபெறவிருக்கும் தர்க்கா டவுண் பட்டினச் சபை உறுப்பினர்களது தேர்தலின் நோக்கத்திற்காக, மேற்குறித்த பட்டினச் சபை உறுப்பினர்களது பதவிக் காலம் தொடங்கவிருக்கும் தேதியைக் கருத்திற் கொண்டு, தமது தற்றுணிவைப் பிரயோகித்து தம்மால் தீர்மானிக்கப்படுகின்றபடியான அத்தகைய தேதிகளில் குறித்த பொதுத் தேர்தலின் பொருட்டுக் குறித்த உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச்சட்டத்தின் 26 ஆம், 38 ஆம் பிரிவுகளால் வேண்டப்படும் நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல் வேண்டும்.

2. (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தில் எது எவ்விதமிருப்பினும், முன்னே சொல்லப்பட்ட பொதுத் தேர்தலின் நோக்கங்களுக்காகத் தேர்தல் நிரல்கள் எவையாவது தயாரிக்கப்படலாகாது ; அத்துடன் 1970, யூலை 21 இல் களுத்துறை மாவட்டத் தேர்தல் அலுவலரால் சான்றளிக்கப்பட்ட தேர்தல் நிரல்களே சொல்லப்பட்ட பொதுத் தேர்தலின் நோக்கங்களுக்கான தேர்தல் நிரல்களாக உபயோகிக்கப்படுதல் வேண்டும்.

12–325/3

---

## உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம்

### 84 ஆம் பிரிவின் கீழான கட்டளை

(262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 84 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

பீலிக்ஸ் ஆர். டி. பண்டாரநாயக்க,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு, 1970.11.30.

### கட்டளை

(262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தில் முரணானதெதுவேனுமிருப்பினும்—

(அ) இதற்குள்ள அட்டவணையின் நிரை II இல் குறிக்கப்பட்டுள்ள வட்டாரங்கள் ஒவ்வொன்றுக்கும் உறுப்பினரொருவரைத் தெரிவு செய்யும் நோக்கத்துக்காக ஒரு வாக்கெடுப்பு நடத்தும் தேதியாக 1970, திசெம்பர் 4 ஐக் குறிப்பிட்டு இதற்குள்ள அட்டவணையின் நிரை I இல் குறிக்கப்பட்டுள்ள தேர்தற் பிரதேசம் அமைந்திருக்கும் மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலராற் பிரசுரிக்கப்பட்ட, அக்கட்டளைச் சட்டத்தின், 38 ஆம், 41 ஆம் பிரிவுகளின் கீழான அறிவித்தல்கள் வறிதாகி எப்பயனுமற்றதாவதோடு எக்காலமும் அவ்வாறேயிருந்துவருவனவாகவும் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) அத்தேர்தற் பிரதேசம் ஒவ்வொன்றும் அமைந்திருக்கும் மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலர், அந்த வட்டாரம் ஒவ்வொன்றின் பொருட்டுமான ஒரு வாக்கெடுப்பை நடத்தும் நோக்கத்துக்காக மற்றொரு தேதியைக் குறிப்பிட்டு மேற்சொல்லப்பட்ட பிரிவுகளின்கீழ் புதிய அறிவித்தல் ஒன்றைப் பிரசுரிக்கவும் வேண்டும்.

### அட்டவணை

| நிரை I<br>கிராமப் பிரதேசம் | நிரை II<br>வட்டாரங்கள் |
|---|---|
| ஒயபொட பேருவ.. | .. இல. 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17. |
| மாரப்பனே .. | .. இல. 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18. |

12–325/4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.